**ஜூலை - 24**

**"நீதிமான் செய்யும் ஊக்கமான வேண்டுதல் மிகவும் பெலனுள்ளதாயிருக்கிறது."**

**- யாக் 5 : 16.**

ஜெபத்தில் கர்த்தரோடு கொண்டுள்ள ஐக்கியம், நம்முடைய காரியங்களைக் கர்த்தர் கண்காணிக்கிறார் என்கிற நம்பிக்கையை நம்மில் அதிகமாக்குகிறது. அவருடைய வார்த்தையின் மகா மேன்மையும் அருமையுமான வாக்குத்தத்தங்களில் அதிகமாகும் விசுவாசத்தைக் கொண்டு வருகிறது. இதோடு கடந்த, நிகழுகிற காலங்களில் அவர் நம்மை நடத்தி வந்திருக்கிறார் என்கிற மிகுதியான உணர்வைக் கொண்டு வருகிறது. கிறிஸ்துவின் எல்லா சகோதரருக்காக அதிகமான அன்பைக் கொண்டு வருகிறது. அவர்களுடைய ஷேமத்திற்காகவும், ஆவிக்குரிய வளர்ச்சிக்காகவும் அதிகமான அக்கறையைக் கொண்டு வருகிறது. இவ்விதமாக, ஆவிக்குரிய காரியங்களில் வளர்ந்து, தேவன் சார்பாகவும், சகோதரர் சார்பாகவும், எல்லா மனிதர் சார்பாகவும் நம்மில் உண்டாகிற ஆவியின் கனிகளில் அபிவிருத்தியடைந்து இவைகளுக்கும் ஜெபத்துக்குமுள்ள நெருக்கமான, சுறுசுறுப்பான ஒரே தன்மையை நிரூபிக்கிறோம். **- Z ’00, 268 (R 2692)**

தேவனால் நீதிமானென்று எண்ணப்படுகிறவனும், அவருக்குப் பிரதிஷ்டை செய்திருக்கிறவனுமே நீதிமான். அப்படியிருப்பதினாலே, அவன் கிறிஸ்துவின் நாமத்திலும், புண்ணியத்திலும் ஏறெடுக்கிற ஜெபங்களுக்கு உத்தரவு கிடைக்கும் என்று முற்றிலுமாக நிச்சயப்படுத்தப்பட்டு ஒரே ஆவியினாலே பிதாவினிடத்தில் சேரும் சிலாக்கியத்தைப் பெற்றிருக்கிறான். அப்படியே, அவனுடைய ஜெபங்கள் தெய்வீகப் பதிலை பெறுவதில் சக்திவாய்ந்ததாக இருக்கின்றன. அதுபோலவே, எல்லாக் காரியங்களிலும் கிறிஸ்துவில் தேவனை மகிமைப்படுத்த வேண்டுமென்கிற தன்னிலுள்ள தீவிரமான ஆசைகளிலிருந்து பாய்வதினால், அவனுடைய ஜெபங்கள் ஊக்கமானவைகளாக இருக்கின்றன. **- P ’30, 79.**

**ஒத்து வாக்கியங்கள் :-**

**உபா 9:18-20; யோசு 10:12; 1சாமு 12:18; 2இராஜா 20:2-5; சங் 10:17;34:15; 145:18; நீதி 15:29; 28:9; யோவா 9:31; 1யோவா 3:22.**

**கோபுர வாசிப்பு : Z ’15, 243 (R 5744)**

**வினாக்கள் : நான் எதற்காக இந்த வாரம் ஊக்கமாக ஜெபித்தேன்? அதில் நேர்ந்த தடைகளை எவ்வாறு மேற்கொண்டேன்?**